


விருதுநகரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் 30 புதிய பேருந்துகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெயசீலன் தலைமையில். அமைச்சர்கள் போக்குவரத்து அமைச்சர் சிவசங்கர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நிதி மற்றும் மின் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர். சீனிவாசன் கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் மேலாண்மை இயக்குனர் ஆறுமுகம் பொது மேலாளர் துரைச்சாமி தொ.மு.சா. பொது செயலாளர் ராஜ செல்வம் தலைவர் பார்த்திபன், பொருளாளர் போத்திராஜ், நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ்.ஆர். மாதவன், ஒன்றிய சேர்மன் சுமதி ராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், எஸ் சுதாகர், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு இளைஞரணி ஆர் கிருஷ்ணகுமார் துணைச் செயலாளர் ஏ எஸ் கே ரமேஷ் குமார் விவசாய அணி நேஷனல் ராமர் மற்றும் போக்குவரத்து கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .




‘முரசொலியில் தொண்டனின் பார்மவையில் தமிழறிஞர்கள் நூல்’ வெளியீட்டு விழா மதுரையில் 14ந் தேதியன்று மணியம்மை பள்ளியில் மன்றத் தலைவர் என்.எம். மாரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மன்ற நிர்வாகிகள் டி.வி. அழகர், போடி காமராசு, லெ. முருகேசன், இல.வெள்ளைசாமி, ச.செல்வக்குமரன், ரெ. கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மன்றத் துணைச் செயலாளர் கரு. ஆறுமுகம் வரவேற்புரை ஆற்றினார். புரட்சிக்கவிஞர் மன்றத் தலைவர்பி. வரதராசன் தொடக்கவுரை ஆற்றினார். சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி,கே.வி.ஆர். எழுதிய “முரசொலியில் தொண்டனின் பார்வையில் தமிழறிஞர்கள்” என்ற நூலினை வெளியிட மேனாள் மேயர் பெ. குழந்தைவேலு பெற்றுக் கொண்டு” நூலின் சிறப்பினை இருவரும் சிறப்பாக எடுத்துரைத்தார்கள்.தமிழ் உயராய்வு மன்ற மேனாள் தலைவர் பேராசிரியர் இ.கி.இராமசாமி, திராவிட இயக்கத் தமிழர்பேரவை துணைப் பொதுச் செயலாளர் இராம. வைரமுத்து, புலவர் இரா. செயபால்சண்முகம், மாமன்ற மேனாள் உறுப்பினர் இரா. விசயராசன்,உலகத் திருக்குறள் பேரவைமாவட்டச் செயலாளர் கவிஞர் மார்சல் முருகன் ஆகியோர்வாழ்த்துரை வழங்கினர். செயலாளர் க.வை.இராமகிருட்டினன் நன்றி கூறினார். விழாவில்தொழிற்சங்கத் தலைவர் மகபூப்ஜான், சுப்பையா மலர் பாண்டியன். எம். கணேசன்,வி. கண்ணன், இரா. இராசேந்திரன், அசோக்ராசு, காமராசு வெள்ளத்துரை, ஏ.ஏம். கண்ணன், திராவிடமாரி, மா. கணேசன்,,குத்தூசி குருசாமி கதிர்வேலு,ஆட்டோ சந்திரன்,பி.என். அம்மாசி,டி.வி.எஸ். நகர் வரதன்,,இலக்கிய அணி, கருப்பையா அமர்நாத் முத்தையா, பொ. நாகராசன், தனம் ஆறுமுகம் வாசுகி முருகேசன் , இரவிச்சந்திரன்,மற்றும் ஏராளமானோர் பங்கேற்றுச்சிறப்பித்தனர்.

### அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் சார்பில்

# “முரசொலியில் தொண்டனின் பார்வையில் தமிழறிஞர்கள்” நூல்!

## கோ.தளபதி எம்.எல்.ஏ. வெளியிட பெ. குழந்தைவேலு பெற்றுக்கொண்டார்

மதுரை, ஜூலை 17-

மதுரையில் 14ந் தேதியன்று மணியம்மை பள்ளியில் மன்றத் தலைவர் என்.எம்.மாரி தலைமையில் நடைபெற்றது.

மன்ற நிர்வாகிகள் டி.வி. அழகர், போடி காமராசு, லெ. முருகேசன், இல.வெள்ளைச்சாமி, ச. செல்வக்குமரன், ரெ.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மன்றத் துணைச் செயலாளர் கரு. ஆறுமுகம் வரவேற்புரை ஆற்றினார்.

புரட்சிக்கவிஞர் மன்றத் தலைவர்பி. வரதராசன்தொடக்கவுரை ஆற்றினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி,கே.வி.ஆர். எழுதிய “முரசொலியில் தொண்டனின் பார்வையில் தமிழறிஞர்கள்” என்ற நூலினை வெளியிட மேனாள் மேயர் பெ. குழந்தைவேலு பெற்றுக் கொண்டு “ நூலின்

சிறப்பினை “இருவரும் சிறப்பாக எடுத்துரைத்தார்கள்.

தமிழ் உயராய்வு மன்ற மேனாள் தலைவர் பேராசிரியர் இ.கி.இராமசாமி, திராவிட இயக்கத் தமிழர்பேரவை துணைப் பொதுச் செயலாளர்இராம. வைரமுத்து,

புலவர் இரா. செயபால் சண்முகம், மாமன்ற மேனாள் உறுப்பினர் இரா. விசயராசன்,உலகத் திருக்குறள் பேரவைமாவட்டச் செயலாளர்

கவிஞர் மார்சல் முருகன் ஆகியோர்வாழ்த்துரை வழங்கினர்.

செயலாளர் க.வை. இராம கிருட்டினன் நன்றி கூறினார்.

விழாவில்தொழிற்சங்கத் தலைவர் மகபூப்ஜான், சுப்பையா மலர் பாண்டியன்.

எம். கணேசன்,வி. கண்ணன், இரா. இராசேந்திரன், அசோக்ராசு, காமராசு

வெள்ளத்துரை, ஏ.ஏம். கண்ணன், திராவிடமாரி, மா. கணேசன், குத்தூசி குருசாமி

கதிர்வேலு,ஆட்டோ சந்திரன்,பி.என். அம்மாசி,டி.வி.எஸ். நகர் வரதன்,,இலக்கிய அணி, கருப்பையா அமர்நாத் முத்தையா பொ. நாகராசன், தனம் ஆறுமுகம்

வாசுகி முருகேசன் , இரவிச்சந்திரன்,மற்றும் ஏராளமானோர் பங்கேற்றுச்சிறப்பித்தனர்.



நெல்லை மாவட்டம் தெற்கு கள்ளிக்குளம் காமராஜர் நடுநிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122 வது பிறந்த நாளை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் திருவுருவப்படத்திற்கு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்,ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவுத் திட்டத்தினை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்து திருவள்ளூர் மாவட்டத்தில் 15.07.2024 அன்று துவக்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தொகுதிக்கு உட்பட்ட குருவிகுளம் டி.டி.டி.ஏ.பள்ளியில் முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. துவக்கி வைத்து மாணவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர் கடற்கரை,அணி அமைப்பாளர்கள் பாலசுப்பிரமணியன், கலைச்செல்வன்,ஒன்றிய கவுன்சிலர்கள் மணிமாலா சுரேஷ்,கணேசன் மற்றும் ஆனந்தராஜ்,செந்தில், முனியாண்டி,சத்தியமூர்த்தி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் விழா தொடர் 101 நிகழ்வாக நடைபெற்று வருகிறது.அதன்படி மரம் பவுண்டேஷன் சார்பில் ராஜா அங்கப்பன்,பீர் மைதீன் ஏற்பாட்டில் பேட்டை பகுதி 27வது மாமன்ற உறுப்பினர் உலகநாதன் தலைமையில் 27 வது வார்டு சிவா தெருவில் ஏழ்மையான நிலையில் இருந்து வரும் சங்கரி என்பவரின் குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு தேவையான உணவுப் பொருள்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் வழங்கினார். நிகழ்வில் அன்டன் செல்லத்துரை, ஸ்டார் முருகன், பெப்சி சரவணன்,பத்மா, சௌந்தரம் முத்துராஜ்,பிந்து செய்யது,ஆனி ராக்லேன்ட், ராஜேஸ்வரி,உலகநாதன்,மணி, ஆட்டோ மணி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

## ஆயிரம் விளக்கு தொகுதியில் பேருந்து நிழற்குடை!

சென்னை, ஜூலை 17-

ஆயிரம்விளக்கு தொகுதிக்குட்பட்ட சென்னை நுங்கம்பாக்கம் வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் 9 வது மண்டலத்து குட்பட்ட 113 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பிரேமா சுரேஷன் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ராமா தெரு சென்னை நடுநிலைப் பள்ளியில் சிறுவர்களுக்காக புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் ஒப்படைக்கும் விழா மற்றும் பள்ளியின் எதிரில் பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கையின் அடிப்படையில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவினை கொண்டாடும் விதமாக புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து பயணியர்கள் நிழற்குடையின் திறப்புவிழா சிறப்பாக நடைபெற்றது. இதனை 113வது வார்டு மாமன்ற உறுப்பினர் பிரேமா சுரேஷ் கலந்து கொண்டு திறந்து வைத்து பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

மேலும் இந்த நிகழ்வுகளின் போது 9 வது மண்டலத்தின் மாநகராட்சி அதிகாரிகள், 113 வது வார்டு செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர், குடிநீர் உதவி பொறியாளர், சுகாதார ஆய்வாளர் மற்றும் கலந்து கொண்டனர்.

### தென் மாவட்டக் கழக வழக்கறிஞரணி சார்பில்

# நெல்லை – பாளையங்கோட்டையில் கருத்தரங்கம்!

## கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு

நெல்லை, ஜூலை 17 -

நெல்லை பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் வருகின்ற 27. 07.2024 சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் தென் மாவட்ட தி.மு.க. வழக்கறி ஞரணி சார்பில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர்



அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி அரசியலமைப்பிற்கு எதிரான, ஜனநாயகத்திற்கு விரோதமான, ஒன்றிய பா.ஜ.க அரசு ஏற்படுத்தியுள்ள மூன்று குற்றவியல் சட்ட திருத்தங்களை திரும்ப பெற வலியுறுத்தி வருகின்ற 27.07.2024 சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் தென்மாவட்ட தி.மு.க வழக்கறிஞரணி சார்பில் கருத்த ரங்கம் நடைபெற உள்ளது.

**ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது!**

அந்த வழக்கறிஞர் அணி கருத்தரங்கம் தொடர்பாக செய்ய வேண்டிய முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்கான மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்,நீதிமன்ற அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் இன்று (17ம் தேதி) மாலை 4 மணி அளவில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட நீதிமன்ற அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கும்முடிப்பூண்டியில் காலை உணவுத் திட்டம் தொடக்கம்!

திருவள்ளூர், ஜூலை 17–

கழக தலைவர் – முதலமைச்சர் அவர்கள் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, ஆரம்பாக்கம் ஊராட்சி புனித மரியன்னை துவக்கப்பள்ளியில் காலை உணவுத் திட்டத்தை மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

உடன் மு.பகலவன், மு.மணி பாலன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம்விஸ்வநாதன், எஸ்.ராமஜெயம், பா.முத்துசாமி, இரா.அறிவழகன், கே.ஆறுமுகம், மு.பாஸ்கரன், டி.ஜெ.ஜி.தமிழரசன், எம்.ஜெயசந்திரன், எம்.மெய்யழகன், அ.மனோகரன், உதயகாந்தம்மாள், டி.மஸ்தான், ஆ.மனோகரன், கா. பரத்குமார். திருஞானம், அங்கமுத்து, ஜெயா, கே.சி.ராஜா, ஏழுமலை, எஸ். கஜேந்திரன், கே.வி.நாகராஜன், டி.கே.ராஜா, அர்ஜீனன், போண்டா சிவா, பா.பரத்குமார், டி.லட்சுமி நாரயணன், ஆர்.எம்.ரவி, தன சேகரன், நரேந்திரன், ஆர்.எஸ்.காளத்தி, அப்பாஸ், சித்திக், எஸ்.செல்வம், வீரன், பாலுமகேந்திரன் மற்றும் கழக உடன் பிறப்புகள் பங்கேற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊரகப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தை அரசு உதவி பெறும் தொடக்க பள்ளிகளில்(ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை) பயிலும் மாணவ,மாணவியர்களுக்கு தொடங்கி வைத்ததை தொடர்ந்து தென்காசி மாவட்டம் மத்தளம்பாறை ஊராட்சி விவேகானந்தா நடுநிலைப் பள்ளியில் ஊரகப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் துவக்க விழா நிகழ்வு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் துவக்கி வைத்து மாணவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்.உடன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் உள்ளார்.

### வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு இன்று (17.07.2024) நன்றி தெரிவிக்கிறார்!



மதச் சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. இன்று (17.07.2024) காலை கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின் படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**கே.வி.குப்பம் ஒன்றியம்**

| ஊராட்சியின் பெயர் | நேரம் | ஊராட்சியின் பெயர் | நேரம் |
|---|---|---|---|
| தொண்டான்துளசி | 8.00 | பசுமாத்தூர் | 2.30 |
| அரும்பாக்கம் | 8.15 | கொசவன்புதூர் | 2.45 |
| செஞ்சி | 8.30 | சென்னங்குப்பம் | 3.00 |
| காளாம்பட்டு | 8.45 | பி.கே.புரம் | 3.15 |
| பனமடங்கி | 9.00 | காவனூர் | 3.30 |
| மாளியப்பட்டு | 9.15 | கவசம்பட்டு | 3.45 |
| கீழ்முட்டுக்கூர் | 9.30 | கீ.வ.குப்பம் | 4.00 |
| மேல்மாயில் | 9.45 | வேப்பங்கனேரி | 4.15 |
| ஆலங்கனேரி | 10.00 | பில்லாந்திப்பட்டு | 4.30 |
| பெருமாங்குப்பம் | 10.15 | முடினாம்பட்டு | 4.45 |
| காங்குப்பம் | 10.30 | கொத்தமங்கலம் | 5.00 |
| மாச்சனூர் | 10.45 | சோழமூர் | 5.15 |
| டி.ஆர்.குப்பம் | 11.00 | வேலம்பட்டு | 5.30 |
| நாகல் | 11.15 | வடுகன்தாங்கல் | 5.45 |
| கீழ்ஆலத்தூர் | 11.30 | அங்கராங்குப்பம் | 6.00 |
| சேத்துவண்டை | 11.45 | பி.என்.பாளையம் | 6.15 |
| அமணாங்குப்பம் | 12.00 | லத்தேரி | 6.30 |
| வேப்பூர் | 12.15 | அன்னங்குடி | 6.45 |
| நெட்டேரி | 12.30 | விழுந்தாங்கல் | 7.00 |
| | | திருமணி | 7.15 |